**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்**

**அசல் வழக்கு எண். 43/2021**

2024- ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29- ஆம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW1 - வது நபரின் வாக்குமூலம் (1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பெரியசாமி | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | ராமசாமி | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | நன்னை | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 58/2024 |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை** :- (தொடர்ச்சி)

1) பாதை போட்டுள்ள இடத்திற்கும் எங்களது இடத்திற்கும் இடையே சின்னு இடம் இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சின்னு இடத்தில் பாதை செல்கிறதா என்றால் இல்லை. சின்னு இடத்திற்கு வடபுறமாக 5 அடி இடம் உள்ளது. அது தான் வாய்க்காலாகவும், பாதையாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தாவா பி செட்டியூல் 12 அடி பாதையாகும். அது அரசால் போட்டுக் கொடுக்கப்பட்டது. 12 அடி இடத்தில் வண்டியை ஓட்டிக்கொண்டு வந்து சின்னு இடத்தில் நடந்து தான் செல்லமுடியும் என்றால் சரிதான். எனது இடத்திற்கு நேரடியாக வண்டி செல்லாது என்றால் சரிதான். சின்னு நிலத்தில் 5 அடி இடம் இருப்பது ஏற்கனவே பாகத்தில் ஒதுக்கப்பட்டது என்றாலும் தாவா சொத்தில் பாதை தொடர்ச்சி மேற்படி இடம் கிடையாது என்றால் சரியல்ல.

2) தாவா சொத்தின் பாதையை யார் போட்டுக் கொடுத்தார்கள் என்றால் ஆர்.டி.ஓ போட்டுக் கொடுத்தார். எந்த வருடம் போட்டுக் கொடுத்தார்கள் என்றால் சுமார் 18 ஆண்டுகளுக்கு முன்பாக போட்டுக் கொடுத்தார்கள். பாதை போட்டதற்கான செலவை யார் செய்தது என்றால் நாங்கள் தான் செலவு செய்தோம். பாதை போடுவதற்கான செலவை செய்து கொள்ள சொல்லி தாசில்தாரோ, ஆர்.டி.ஓ–வோ உத்தரவு போட்டார்களா என்றால் அவ்வாறு உத்தரவு எதுவும் கொடுக்கவில்லை. ஆர்.டி.ஓ எந்த தேதியில் இடத்திற்கு வந்தார் என்றால் சுமார் 20 ஆண்டுகளுக்குள் வந்திருப்பார். நான் எனது இடத்திற்கு தாவா பி ஷெட்யூலை தவிர வேறு வழி இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3) ஆர்.டி.ஓ. விடம் தாவா சொத்தை தவிர வேறு பாதை இல்லை என்று காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். அப்போது ஆர்.டி.ஓ.–வுடன் யார் இருந்தார்கள் என்றால் அதுபற்றி எனது அப்பாவிற்கு தான் தெரியும். மேற்கில் உள்ள சர்வே எண். 9, 12 பி ஆகியவற்றையும் காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். மேற்படி சர்வே

DMK Court Kumaran

எண்களுக்கு மேற்கு பகுதியை ஒட்டி வாரி இருந்ததையும் ஆர்.டி.ஓவிடம் காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். அவர் அதை குறித்துக் கொண்டாரா என்பது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கில் சின்னு சாட்சி அளித்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சின்னு தனது சாட்சியத்தில் தாவா பி ஷெட்யூலில் இதுவரை பாதை இல்லை என்றும், தான் அந்த பாதையை பயன்படுத்தியதில்லை என்றும் சொல்லியுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சின்னுவுக்கும், எனக்கும் பிரச்சனை இருப்பதால் அவர் அவ்வாறு தெரிவித்துள்ளார்.

4) பி அட்டவணை சொத்தில் பாதை உள்ளது என்றும், வேறு பாதை இல்லை என்பதை காட்டுவதற்காக நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து ஆணையரை அழைத்து சென்றேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் இருந்து ஆணையரை அழைத்து சென்றிருந்தால் அவர் தாவா பி ஷெட்யூலில் பாதை இல்லை என்பதையும் எனக்கு வேறு இடத்தில் பாதை உள்ளது என்பதையும் குறிப்பிட்டிருப்பார் என்பதால் தான் நான் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய சொல்லி கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆர்.டி.ஓ. தாவா சொத்தை வந்து பார்வையிடவில்லை என்றாலும் நான் கொடுத்த மனுவின்பேரில் எனக்கு ஆதரவாக பாதை இருப்பதாக சொல்லியுள்ளார் என்றாலும், பூஸ்துதியில் அவ்வாறு பாதை எதுவும் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.

5) தாவா சொத்தை ஆர்.டி.ஓ பார்த்திருந்தால் எனக்கு வேறு பாதை உள்ள விபரம் அவருக்கு தெரிய வந்திருக்கும் அதனால் தாவா பி ஷெட்யூல் பாதையை எனக்கு ஒதுக்கி உத்தரவு போட்டிருக்கமாட்டார் என்று சொன்னால் சரியல்ல. ஆர்.டி.ஓ போட்ட உத்தரவு தவறு என்பதால் தான் மேற்படி உத்தரவை நடைமுறைபடுத்தவில்லை என்றாலும், பூஸ்துதியில் பாதை என்று அறிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆர்.டி.ஓ–வை எனது தரப்பு சாட்சியாக விசாரணை செய்வோமா என்றால் இல்லை. சர்வேயருக்கு படி கட்டியதற்கான ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 20 வருடங்களுக்கு முன்பு பாதை போடுவதற்கு முன்பு எங்களது வயலுக்கு எப்படி சென்று வந்தோம் என்றால் மேற்படி இடம் கறம்பை காடாக இருந்ததால் அது வழியாக தான் சென்று வந்தோம்.

6) மேல்புறம் உள்ள வண்டி பாதை வழியாகவும், எனது பத்திரத்தில் கண்டுள்ள பாதையின் வழியாக தான் இதுநாள் வரை சென்று வந்தோம் என்றாலும், தற்போது வழக்கிற்காக தாவா பி ஷெட்யூல் பாதையில் சென்று வந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியும், அவரது கிரய முன்னவர்களும் பட்டா நிலத்துடன் தாவா சொத்தையும் அனுபவித்து வந்தார்கள் என்றாலும், அதற்கான தண்ட தீர்வை செலுத்தி வந்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வாதியின் கிரய முன்னவர்கள் அனுபவித்து வந்த தாவா சொத்தையும் சேர்ந்து தான் வாதிக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே தாவா சொத்தில் குட்டை இருந்தது என்றாலும், அந்த குட்டையில் இருந்து நீர் எடுத்து தான் தாவா ஏ ஷெட்யூல் சொத்திற்கு நீர் பாய்ச்சி அனுபவம் செய்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல.

மேற்படி குட்டை தற்போது வரை தாவா பி ஷெட்யூல் சொத்தில் வடபுறம் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

7) தாவா சொத்தை வாதி கிரயம் பெற்றதில் இருந்து தற்போது வரை தென்னை மரம் வைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபரங்களை எல்லாம் ஆர்.டி.ஓ பார்த்திருந்தால் எனக்கு உத்தரவு போட்டுக் கொடுத்திருக்கமாட்டார் என்று சொன்னால் சரியல்ல. ஆர்.டி.ஓ. எந்தவித விசாரணையும் செய்யாமல் தல விசாரணை மேற்கொள்ளாமல் உத்தரவை வழங்கியதால் மேற்படி உத்தரவு செல்லாது என்று வாதி பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 44/2021 –ல் இல்லாத பாதைக்கு தடை உத்தரவு கேட்டு தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வாதியின் வழக்கான 43/2021 தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DM Cum JM Court, Kunnam